# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 174/2025** |
| Prosecution witness | : | P.W. 5 |
| List of witness | : | L.W.6 |
| Name | : | கணேசன் |
| Father's /Husband Name | : | கோவிந்தசாமி |
| Taluk | : | நன்னிலம் காவல் நிலையம் |
| Age | : | 59 |
| Occupation | : | உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 07th day of May 2026. Both accused present.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது நன்னிலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 29.05.2025 ம் தேதியன்று நான் குடவாசல் காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது ராஜா மனைவி கலைவாணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று காவல் நிலைய குற்ற எண்.157/2025 BNS சட்டப்பிரிவு 296(b) மற்றும் 4(1)(c) TNP Amendment act,ன் கீழ் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

பின்னர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே 16.30 மணியளவில் சம்பவ இடமான வாதியின் மாடி வீட்டு வாசல் அருகே சென்று சாட்சிகள் பாலு மற்றும் பிரேமா ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் இவ்வழக்கில் சம்பவம் உண்மை என்று தெரிய வரவே எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரிகளை மேலஆதிச்சமங்கலம் எதிரிகளின் வீட்டருகே நின்று கொண்டிருந்தவர்களை அன்றைய தினமே 19.30 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து நிலைய பிணையிலேயே விடுவித்துள்ளேன்.

இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிகளின் செய்கையானது BNS சட்டப்பிரிவு 296(b) மற்றும் 4(1)(c) TNP Amendment act ன் கீழ் தண்டித்தக்க குற்றமென கடந்த 29.05.2025 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

ஆஜர் எதிரிகளும் அ.சா.1 ம் உறவினர்கள் எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். ஆஜர் எதிரிகளுக்கும் அ.சா.1 க்கும் முன் விரோதம் உள்ளதா என்றால் உள்ளது. அ.சா.1 கொடுத்த புகாரில் 1 ஆம் எதிரி மது அருந்திக் கொண்டு பிரச்சனை செய்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அ.சா.1 கொடுத்த புகாரில் இடைச்சொற்களாக சேர்த்து எழுதியுள்ளாரா என்றால் சரிதான். அவ்வாறு இடைச்சொற்கள் செய்ததற்கான சுருக்கெழுத்து இல்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் அசிங்கமான வார்த்தையால் பேசியதால் தனக்கு அசிங்கமும் அவமானமும் ஏற்பட்டதாக குறிப்பிட்டு புகாரில் சொல்லியுள்ளதா என்றால் இல்லை. அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.07 15:39:58 +0530

`

District Munsif cum
Judicial Magistrate,
Kodavasal.